**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்** — **தலைவர்**
**R.சந்திரசேகரன்.** — **பொதுச்செயலாளர்**

**சுற்றறிக்கை - 21/2017** 16-12-2017

அன்புடையீர்,

வணக்கம். சென்னை ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் காரணமாக தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஊதிய உயர்வு, வேலைபளு திருத்தம் சம்மந்தமான நடவடிக்கைகள், மீண்டும் தொடரப்பட்டு, அநேகமாக இம்மாத இறுதிக்குள் ஒப்பந்தம் காண வாரியமும், தமிழக அரசும் முன்வருவார்கள் என நம்புகிறோம்.

❖ உள்முகத்தேர்வில் இளநிலை உதவியாளர் நியமனத்திற்கு கல்வித் தகுதி S.S.L.C. என்பதை, பட்டப்படிப்பு என மாற்றியதனை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு (Writ Appeal) தாக்கல் செய்துள்ளோம். அடுத்த வாரத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும், என்று எதிர் பார்க்கிறோம்.

❖ களப்பிரிவு தொழிலாளர்கள் பதவி உயர்வு, வழக்குகளைக் காரணம் காட்டி, 2 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது வழக்குகள் முடிந்து, நீதிமன்றத் தீர்ப்பும் வந்துவிட்டபடியால், நிறுத்திவைக்கப்பட்ட பதவி உயர்வு, மீண்டும் வழங்கப்படும் என்ற தொழிலாளர்கள் எதிர்பார்ப்பு 12.12.2017-ல் முதன்முதலாக நீலகிரி வட்டத்தில் நிறைவேறியது. இதர வட்டங்களுக்கும் தொடரும் என்று எதிர்பார்க்கப்பட்ட சூழ்நிலையில், வாரிய நிர்வாகத்தின் தடுமாற்றம் காரணமாக மீண்டும் பதவி உயர்வுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே இடியாப்ப சிக்கலாக இருக்கும் இப்பிரச்சனைக்கு சுமூகத்தீர்வு காணப்படுமா? தொழிலாளர்களுக்கு பதவி உயர்வில் நிவாரணம் கிடைக்குமா? அல்லது பிரச்சனை மேலும் சிக்கலாக்கப்படுமா? போகாத ஊருக்கு வழிகாட்டப் படுமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

❖ 9.12.2017 சென்னையில் நடைபெற்ற மாநிலச் செயற்குழுவில், சங்கத்தின் தூண்களாக விளங்கி சமீபத்தில் இயற்கையெய்திய திரு.சு.முருகேசன், அமைப்புச்செயலாளர், மற்றும் திரு.க.முத்துசாமி, வட்டச்செயலாளர், மேட்டூர் அனல் மின்வட்டம் ஆகியோருக்கு அஞ்சலி தெரிவித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் ஊதிய உயர்வு மற்றும் வேலைபளு சம்மந்தமாக கொடுக்கப்படவுள்ள வரைவு ஒப்பந்தத்தின் மீது முடிவெடுக்கும் அதிகாரத்தை தலைவர். பொதுச்செயலாளர் மற்றும் நிதிச்செயலாளருக்கு வழங்கியும், 2018-2019 ஆண்டிற்கான சங்கப்பொறுப்பாளர்கள் தேர்தலை, தற்போதுள்ள சங்கத்துணைவிதிகள்படி நடத்திடவும், இளநிலை உதவியாளர் கல்வித் தகுதி வழக்கில் மேல்முறையீடு (Writ Appeal) செய்திடவும், 2018-2019 ஆண்டிற்கான சங்கத்தேர்தல் விதிகள் முடிவு செய்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தேர்தல் விதிகளின்படி 2017-ம் ஆண்டிற்கு சந்தாவை 31.12.2017-க்குள் மத்திய சங்கத்திற்கு செலுத்தியவர்கள் மட்டுமே தேர்தலில் வாக்களிக்கவும், போட்டியிடவும் தகுதிபடைத்தவர்கள். 2017-ம் ஆண்டிற்கு சந்தாவை 31.12.2017-க்குள் மத்திய சங்கத்திற்கு செலுத்திய கிளைகள் மட்டுமே தேர்தல் நடத்திட முடியும்.

கிளைகளுக்கு 28.2.2018
வட்டங்களுக்கு 31.3.2018
மண்டலங்களுக்கு 30.4.2018 –க்குள் தேர்தல் நடத்திடுவது என்றும், பொதுக்குழு நடத்திட முன்வரும் வட்டத்தை தேர்வு செய்வது, மண்டபம்

கிடைப்பது முதலிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, மாநிலப் பொதுக்குழு தேர்தல் உத்தேசமாக 31.5.2018-க்குள் நடத்திடுவது என்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

--2

❖ எதிர்வரும் ஊதிய உயர்வில் உறுப்பினர்களிடம் ரூ.500- நன்கொடையினை பிடித்தம் செய்து சங்கத்திற்கு வழங்கிட நிர்வாகத்திற்கு வேண்டுகோள் வைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

❖ PSI ஆசிய பசிபிக் நாடுகளின் செயலாளராக பணியாற்றி எதிர்வரும் 31.12.2017-ல் ஓய்வு பெற இருக்கும் சகோதரி இலக்குமி அவர்களுக்கு மாநிலச்செயற்குழுவில் பாராட்டு தெரிவிக்கப்பட்டு, ஐம்பொன் விநாயகர் சிலையும் சங்கத்தின் நினைவுப்பரிசாக வழங்கப்பட்டது.

❖ 16.12.2017 மற்றும் 17.12.2017-ல் போபாலில் நடைபெறும் PSI –யின் இளைஞர்களுக்கான தேசிய கருத்தரங்கில் நமது சங்கத்திலிருந்து

1) திரு. மனோகரன்-தட்டெழுத்தர்–சென்னை தலைமை அலுவலகக் கிளை
2) திருமதி நான்சி ஜேன் இ.நி.உ.(நி) கோவை வடக்கு ஆகிய இருவரும் கலந்து கொள்கின்றனர்.

❖ PSI –யின் நிதி உதவியுடன் எதிர்வரும் 24.12.2017 அன்று பவானியில் நூற்றுக்கும் மேற்பட்ட ஒப்பந்த, பகுதி நேரத் தொழிலாளர்கள் கலந்து கொள்ளும் “கருத்தரங்கம்” நடைபெறவுள்ளது. கருத்தரங்கினை

திரு. B.தியாகராஜன், பன்னாட்டுத் தொடர்பு செயலாளர்,

திரு. B.கோபாலகிருஷ்ணன், மண்டலச்செயலாளர்-ஈரோடு,/கல்விக்குழு தலைவர்

திரு. அபுத்தாயர் மண்டலச்செயலாளர் – மதுரை ஆகியோர் முன்னின்று நடத்துகிறார்கள்.

கருத்தரங்கினை சங்கத்தலைவர் திரு.K.சந்திரசேகரன் துவக்கி வைக்கிறார்.

துணைத்தலைவர் திரு. M.நாகராஜன், கோவை அவர்கள் நிறைவு செய்கிறார்.

தோழமையுள்ள

இ.சந்திரசேகரன்

பொதுச்செயலாளர்

**குறிப்பு** : *இளநிலை உதவியாளர் கல்வித்தகுதி வழக்கில் நமது மேல் முறையீட்டு மனு இன்று (19.12.2017) விசாரணைக்குப்பின் அனுமதிக்கப்பட்டு S.S.L.C. மட்டும் தேர்வு பெற்றவர்களுக்கு உள்முகத்தேர்வு வழங்குவதற்கு ஏதுவாக 200 பொறுப்புகள் காலியாக வைத்திருக்க வேண்டும் என்ற இடைக்கால உத்திரவும் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். நமது சங்கத்தரப்பில் மூத்த வழக்கறிஞர் திரு.V.பிரகாஷ் அவர்களும், வாரியத்தரப்பில் அரசு தலைமை வழக்கறிஞர் திரு.விஜயநாராயணன் அவர்களும் விவாதம் செய்தார்கள்.*

பெறுநர்.
கிளைச்செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள்,
வட்டச்செயலாளர்கள்,
வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள், மற்றும்
மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.
நகல் : செய்தி மடல்.